## கொடைக்கானல் நகராட்சி

2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாள் (31.01.2020) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கல்லறைமேடு பகுதியில் அமைந்துள்ள தனியார் ஹோட்டல்கள் தங்கும் விடுதிகள் மற்றும் பள்ளிகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்வதற்கு நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்வதற்கு முன்பும், சுத்திகரிப்பு செய்யப்பட்டதற்கு பின்பும் உள்ள நீரின் தன்மையை (CUD, BUD, TSS, OIL, GREASE + PH Value) குறித்து பகுப்பாய்வு செய்வதற்காக மதுரை திருப்பரங்குன்றம், தியாகராசர் பொறியியல் கல்லூரி மூலம் ஆய்வு மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7100/– (ரூபாய் ஏழாயிரத்து நூறு மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3495/19/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **733, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16495/2017/இ4 நாள். 24.12.2019–ல் தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2019–2020ன் கீழ் திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் திண்டுக்கல் மாநகராட்சி, பழனி, கொடைக்கானல் , பல்லடம் , கரூர், ஒட்டன்சத்திரம் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் நாள் ஒன்றுக்கு சேகரமாகும் விற்பனை செய்ய இயலாத, எளிதில் தீப்பிடிக்கக் கூடிய உலர் கழிவுகளை எரியூட்டும் வகையில் 10 டன் திறனுள்ள எரியூட்டும் மையத்தினை ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

மேலும், திண்டுக்கல் மாநகராட்சி, பழனி, கொடைக்கானல் , பல்லடம் , கரூர், ஒட்டன்சத்திரம் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் தினமும் சேகரமாகும் உலர் கழிவுகளை எரியூட்டும் மையத்திற்கு அனுப்பவும், மேற்குறித்த எரியூட்டும் மையத்திற்கான இயக்குநர் மற்றும் பராமரிப்பு செலவினத்தினை சம்பந்தப்பட்ட நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளவும் உரிய மன்ற அனுமதி பெற தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொடைக்கானல் நகராட்சியில் சேகரமாகும் 4.30 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை திண்டுக்கல் மாநகராட்சியில் அமைக்கப்படவுள்ள எரியூட்டும் மையத்திற்கும் அனுப்பவும், அவ்எரியூட்டும் மையத்திற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினத்தினை பகிர்ந்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி தோராய செவின பங்கு தொகையினை SUC மூலம் மேற்கொள்ளவும்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **734, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) 14 வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதியின் கீழ் கொடைக்கானல் நகராட்சி பகுதியில் சாலை மேம்பாட்டு பணிக்காக ரூ. 160.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் குறுஞ்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட சாலை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | பில்டிங சொசைட்டி, எம்.எம். சாலையில் தார்ச்சாலை அமைத்தல் (575 மீ x 6 மீ) | 50.00 |
| 2 | குறிஞ்சி ஆண்டவர் கோயில் தெரு, சாலையில் தார்ச்சாலை அமைத்தல் (690 மீ x 5 மீ) | 50.00 |
| 3 | உட்வில் சாலை, 7–ரோடு, அண்ணாசாலை பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் (570 மீ x 7 மீ) | 50.00 |
| 4 | பழைய அப்பர்லேக் சாலையில் சிமிண்ட் சாலை மழை நீர் வடிகால் அமைத்தல் (536 மீ x 4.50 மீ) | 25.00 |
| | மொத்தம் | 175.00 |

14 வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகையினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். மானியம் போக மீதமுள்ள தொகையினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **735, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சி பணியாளர்களின் சேமநலநிதிக்காக கடந்த 2013–2014ம் ஆண்டு முதல் 2018–2019ம் ஆண்டு முடிய ஆறு ஆண்டுகளுக்கு சம்பந்தப்பட்ட பணியாளர்களின் சம்பளப் பட்டியல் மூலம் சேமநலநிதி சந்தா தொகை மற்றும் தற்காலிக முன்பணம் வழங்கியதற்கான பிடித்தம் தொகைகள் கொடைக்கானல் சார்நிலை கருவூலத்தில் உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட அரசு கணக்கில் செலுத்தியதற்கான கணக்குகள் நகராட்சியால் தனிப்பதிவேட்டில் பேணப்பட்டு வருகிறது.

மேற்காணும் விபரத்திற்கு அரசு கணக்கில் சேமநலநிதி செலுத்தியதற்கான வட்டித் தொகையை அரசிடமிருந்து பெறும் பொருட்டு தனிநபர்களின் வட்டி விகிதம், வட்டி கணக்கீட்டு சுருக்கம், அச்சுக்கூலி உள்பட உரிய பிரேரணைகள் தயார் செய்து கொடுப்பதற்காக கீழ்காணும் விபரத்திற்கு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ராஜீவ் சாப்ட் சிஸ்டம், சென்னை. | ரூ.97,300/– |
| 2. | என்டெக் சொலிசன்ஸ், சென்னை. | ரூ.1,06,462/– |
| 3. | வெங்கட் ஈவென்ட்ஸ், சென்னை. | ரூ.1,15,527/– |

மேற்கண்ட விபரத்திற்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் ரூ.97,300/–க்கு கொடுத்துள்ள திருவாளர்கள் ராஜீவ் சாப்ட் சிஸ்டம், சென்னை நிறுவனத்தாரின் விலை விகிதத்தை ஏற்றுக் கொள்வதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்நகராட்சியின் நிர்வாக நலன் மற்றும் நகராட்சி பணியாளர்களின்நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிடமிருந்து பெறப்பட வேண்டிய வட்டி ரூ.83,00,457–க்கான பிரேரணைகளை ராஜீவ் சாப்ட் சிஸ்டம் நிறுவனத்தாரிடமிருந்து தயார் செய்து வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி மூலம் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3558/2009/பி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **736, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) இந்நகராட்சியின் சேவைவரி கேட்புகள் வசூல் மற்றும் நிலுவை குறித்த வழக்குகள் தொடர்பான விபர அறிக்கை மத்திய கலால் மற்றும் சேவைவரி அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றது. சேவைவரி வழக்குகள் மீதான கேட்புகள், வசூல் மற்றும் நிலுவை சரி செய்து கொள்வதற்காக இந்நகராட்சி பட்டய கணக்கர் திரு.எஸ்.இராமநாதன் அவர்கள் மூலமாக விபர அறிக்கை உரிய வழிமுறையில் சேவை வரித் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்காணும் விபரத்திற்கு மத்திய கலால் மற்றும் சேவைவரி அலுவலகம், வத்தலக்குண்டு கண்காணிப்பாளர் மற்றும் திண்டுக்கல் உதவி ஆணையர் அவர்களின் ஒப்புதலுடன் நகராட்சி பட்டய கணக்கர் மூலமாக ஆண்டு வாரியாக வழக்குகளை சரி செய்ய மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட சப்கா விஸ்வாஸ் திட்டம் 2019ன் வழியாக நிலுவைகள் மற்றும் கேட்புகளை முறையே ஆய்ந்து கீழ்காணும் அட்டவணை விபரத்திற்கு அதற்கான அசல் படிவங்கள் ஆன்லைன் மூலமாக சரி செய்து உரிய விபர அறிக்கை பெறப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

<u>SERVICE TAX – SABKA VISHWAS SCHEME – 2019 – FINAL CALCULATION SHEET</u>

| வ. எண் | வருடம் | சேவை வரி கேட்பு ரூ. | தண்டம் | வட்டி ரூ | மொத்த கேட்பு | செலுத் தியது | நிலுவை கேட்பு | சப்கா விஸ்வாஸ் திட்டம் 2019ன் மூலம்செலுத்த வேண்டியது | நகராட்சி செலுத்து வதிலிருந்து விலக்களிக் கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2007–08 முதல் 2011–12 | 5025367 | 4485165 | 20000 | 9530532 | 5025367 | 4505165 | 0 | 4505165 |
| 2. | 2012–13 | 1574373 | 557500 | 20000 | 2151873 | 0 | 2151873 | 472312 | 1679561 |
| 3. | 2013–14 | 1690495 | 669050 | 20000 | 2379545 | 0 | 2379545 | 676198 | 1703347 |
| 4. | 2014–15 | 1431220 | 153122 | 20000 | 1604342 | 811220 | 793122 | 248000 | 545122 |
| 5. | 2015–16 | 716923 | 625000 | 20000 | 1361923 | 716923 | 645000 | 370731 | 274269 |
| 6. | 2016–17 | 1553279 | 185000 | 20000 | 1758279 | 1553279 | 205000 | 0 | 205000 |
| 7. | 2017–18 | 163974 | 0 | 20000 | 183974 | 69926 | 114048 | 69926 | 44122 |
| | | **12155631** | **6674837** | **140000** | **18970468** | **8176715** | **10793753** | **1837167** | **8956586** |

மேற்காணும் அடிப்படையில் இந்நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய ஆண்டுவாரியான சேவை வரித் தொகைகள் அனைத்தும் சேவைவரி வழக்குகள், நிலுவைகள், கேட்புகள், அபராதங்கள், வட்டிகள் ஆகிய அனைத்தும் மேற்படி திட்டத்தால் முறையாக முடித்து வைக்கப்பட்டுள்ளது. அதற்கு உரிய சலான்கள் ஆன்லைனில் பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் அட்டவணையின்படி சேவைவரியின் மொத்த கேட்பு ரூ.1,89,70,468/–ல் நகராட்சியால் செலுத்தப்பட்ட தொகை ரூ.81,76,715/– நீங்கலாக எஞ்சிய தொகை ரூ.1,07,93,753/–ல் தற்போது சப்கா விஸ்வாஸ் திட்டம் 2019ன்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.1837167/–ம் நீங்கலாக ரூ.89,56,586/–க்கு இந்நகராட்சியால் சேவைவரி செலுத்த வேண்டியதிலிருந்து விலக்கு பெற்று பயன்பெறுகிறது. (ரூ.18970468 – 8176715 = 10793753– 1837167 = 89,56,586).

எனவே, மேற்கண்ட திட்டத்தின் கீழ் தற்போது செலுத்த வேண்டிய சேவைவரித் தொகை ரூ.18,37,167/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : சேவைவரி நிலுவைகள் செலுத்துவதற்காக மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள சப்கா விஸ்வாஸ் திட்டம் 2019ன்படி இந்நகராட்சியால் 2007–08 முதல் 2017–18 முடியவுள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை கேட்புத் தொகை ரூ.10793753/–ல் நகராட்சியால் விலக்கு பெற்று பயன்பெறக்கூடிய தொகை ரூ.89,56,586/–ம் நீங்கலாக எஞ்சிய தொகை ரூ.1837167/–ஐ நகராட்சி நிதியிலிருந்து சேவைவரிக்கான அரசு கணக்கில் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5223/2011/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **737, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

**6)** மதுரை வருமானவரித் துறை அலுவலரின் 30.05.2019ம் நாளிட்ட கடிதத்தின்படி, 2008–2009ம் நிதி ஆண்டு முதல் 2017–2018ம் ஆண்டு முடிய வருமானவரி செலுத்தியதற்கான விபர அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதில், நகராட்சியால் வருமன வரியை குறைவாக பிடித்தம் செய்தது, பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரியை தாமதமாக செலுத்தியதில் தாமதத்திற்கான வட்டி மற்றும் தண்டத் தொகை உள்ளிட்ட மொத்த தொகை ரூ. 1,19,66,760/– (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது லட்சத்து அறுபத்தி ஆறாயிரத்தி எழுநூற்றி அறுபது மட்டும்) செலுத்த வேண்டுமென கடிதம் வரப்பெற்றது. மேற்கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடி கடந்த 06.06.2019ம் நாளில் இந்நகராட்சி கணக்கரால் நேரடி விசாரணையில் கலந்து கொள்ளப்பட்டது.

மேற்கண்ட விசாரணையினைத் தொடர்ந்து இந்நகராட்சி பட்டய கணக்கர் திரு.எஸ்.இராமநாதன் அவர்கள் மூலம் வருமானவரி இணைய தளம் வழியாக வருமானவரி செலுத்தியதற்கான தேடுதல் மூலம் உரிய விபரங்கள் சரி செய்யப்பட்டது. மேற்கண்ட விபரத்திற்கு முறையான விபர அறிக்கை தாக்கல் வாயிலாக கடந்த 01.07.2019ம் நாளில் ரூ.94,28,980/– வரை மொத்த கேட்பிலிருந்து குறைக்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவை ரூ.25,37,780/–ல் தற்போது 19.11.2019ல் நாளில் நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் ரூ.13,03,800/– வரை கேட்பு குறைக்கப்பட்டள்ளது.

மேற்கண்ட விபரத்திற்கு வருமான வரித் துறைக்கு செலுத்த வேண்டிய மொத்த கேட்பு ரூ.1,19,66,760/–ல் ரூ.1,07,32,780/– வரை கேட்பிலிருந்து குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் மேற்கொண்ட இந்நகராட்சி பட்டய கணக்கர் திரு.எஸ்.இராமநாதன் அவர்களுக்கு அதற்கான கட்டணம் ரூ.12,000/– (ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) வழங்க கோரி 26.06.2019ல் பட்டியல் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பட்டய கணக்கரின் வேலைக்கான பட்டியலை ஏற்று அதற்கான கட்டணம் ரூ.12,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்நகராட்சியால் வருமான வரித்துறைக்கு செலுத்த வேண்டிய ஒட்டு மொத்த கேட்புத் தொகை ரூ.1,19,66,760/–ல் பட்டய கணக்கர் மூலம் முறையாக வருமான வரி விபர அறிக்கை தாக்கல் செய்த வகையில் ரூ.1,07,32,780/– வரை குறைக்கப்பட்டு இந்நகராட்சிக்கு விலக்கு பெறப்பட்டள்ளது. இதன் விபரத்திற்கு விபர அறிக்கை தாக்கல் செய்த பட்டய கணக்கர் திரு.எஸ்.இராமநாதன் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.12,000/–ஐ கட்டணமாக இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1100/2008/பி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **738, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN 57 W 9634 க்கு டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தேவையான பழுது நீக்கப் பணிகளை தேனி TVS பணிமனை மூலம் மேற்கொள்ளப்பட்டு வாகனம் தகதிச்சான்று பெறுவதற்காக வத்தலக்குண்டுவில் உள்ள மோட்டார் வாகன அலுவலர் மூலம் வாகனத்தை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட வாகனத்தின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் கீழ்காணும் விபரத்திற்கு கட்டணங்கள் செலுத்த வேண்டியதாயிற்று.

| வ.எண் | செலவினங்கள் விபரம் | ரசீது எண் | நாள் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | சாலை வரி | TN200106V2407781<br>TN200106C8144641 | 06.01.2020 | 25226/– |
| 2 | தகுதிச் சான்று கட்டணம் | TN200106V1364197<br>TN200106C3110145 | 06.01.2020 | 850/– |
| 3 | பசுமை வரி | TN200106V1365150<br>TN200106C4110869 | 06.01.2020 | 505/– |
| 4 | வாகனம் புகை பரிசோதனை | TN06000130001228 | 27.12.2019 | 110/– |
| 5 | எரி பொருள் செலவினம் | 164120 | 08.01.2020 | 1000/– |
| 6 | வேக கட்டுப்பாட்டு கருவி பொறுத்தியது | INV-97 | 07.01.2020 | 10000/– |
| | | | மொத்தம் ரூ. | 37691/– |

மேற்கண்ட பட்டியலின்படி மொத்த செலவு தொகை ரூ.37,691/–ஐ (ரூபாய் முப்பத்தி ஏழாயிரத்து ஆறுநூற்று ஒன்று மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொது சுகாதார நலன் கருதி TN 57 W 9634 டம்பர் பிளேசர் குப்பை அகற்றும் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2738/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **739, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.0622/A3/2017/PH, நாள்.30.12.2019ல் கேட்டுக் கொண்டுள்ளபடி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ்காணும் துப்புரவு ஆய்வாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டதற்கு உரிய கட்டணம் செலுத்த கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | பயிற்சியில் கலந்து கொண்ட பணியாளர்களின் பெயர் | பயிற்சி காலம் | பயிற்சி கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.M.பாண்டியராஜன், துப்புரவு ஆய்வாளர். | 21.11.2017 முதல் 23.11.2017 வரை | ரூ.2847/– |
| 2 | திரு.P.பாண்டிச் செல்வம், துப்புரவு ஆய்வாளர். | 09.01.2018 முதல் 11.01.2018 வரை | ரூ.2550/– |
| 3 | திரு.V.சுப்பையர், துப்புரவு ஆய்வாளர். | 26.03.2018 முதல் 28.03.2018 வரை | ரூ.2550/– |

மேற்கண்ட நாட்களில் துப்புரவு ஆய்வாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதற்கு பயிற்சி கட்டணம் தொகை ரூ.7947/– (ரூபாய் ஏழாயிரத்தி தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழு மட்டும்) தமிழ் நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3808/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **740, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் நலன் கருதி குப்பைகளை அகற்றுவதற்கு தூய்மை இந்தியா திட்டம் 2019ன் கீழ் புதிதாக வாங்கப்பட்ட 8 எண்ணங்கள் TATA ACE LCV வாகனங்கள் சர்வீஸ் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் வாகன உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களான ABT Industries Ltd., திண்டுக்கல், நிறுவனத்தில் சர்வீஸ் பணிகள் மேற்கொள்ளுவதற்கும் அதற்கான உத்தேச செலவீனம் தொகை ரூ.90000/–ஐ (ரூபாய் தொன்னூராயிரம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.79/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **741, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 57 AU 3862 டிப்பர் வாகனத்திற்கு 6 டயர்கள் தேய்ந்து பழுது அடைந்துவிட்டதால் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி பணிகள் செய்ய சிறமமாக உள்ளது. எனவே, நகரில் தேங்கும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றும் பொருட்டு துப்புரவுப் பணி சுணக்கமின்றி நடைபெற மேற்கண்ட வாகனத்திற்கு 6 டயர்கள் MRF கம்பெனி மூலம் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.65,000/–ஐ (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **742, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் பராரியாய் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு தடுப்பூசி போடவும் அதற்குரிய செலவினத் தொகை நாய் ஒன்றுக்கு ரூ.700/— வீதம் (நகராட்சி 50% மற்றும் விலங்குகள் நலவாரியம் 50% ) செலவு செய்யவும் G.O.No.29, Municipal Administration and Water supply (TP-2) Department, date: 22.01.2013ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தெருக்களில் பராரியாய் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு (KSPCA) அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு டிசம்பர்—2019ல் 10 ஆண் நாய்கள் 44 பெண் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டும் ARV தடுப்பூசி போடப்பட்டும் அதற்கான பட்டியல் தொகை 54 x 700 = ரூ.37800/— (ரூபாய் முப்பத்தி ஏழாயிரத்தி எண்ணூறு மட்டும்) KSPCA நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையில் 50% தொகையான ரூ.18900/— (ரூபாய் பதினெட்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) மேற்கண்ட KSPCA நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.2936/04/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **743, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண்.586, நாள்.31.01.2019ன்படி, கொடைக்கானல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலம் தனியார் மயம் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதற்கு இவ்வலுவலக ந.க.எண்.3140/2016/எச்.1, நாள்.05.02.2019ன்படி GESM Environment Services, Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்காணும் விபரத்திற்கு GESM Environment Services நிறுவனத்தின் மூலம் 80 பணியாளர்களைக் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி உத்தரவு காலம் 04.02.2020 உடன் முடிவடைவதால் பொது மக்களின் நலன் கருதி நகர்ப் பகுதிகளில் துப்புரவுப் பணி சுணக்கமின்றி நடைபெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை, தற்போது பணி மேற்கொண்டு வரும் GESM Environment Services, Chennai நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 80 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு (90 நாட்கள்) ஒரு நபருக்கு ஒரு நாள் கூலி ரூ.387.16 பைசா என்ற பழைய விகிதத்தில் 387.16 x 80 x 90 = ரூ.27,87,552/— (ரூபாய் இருபத்தி ஏழு லட்சத்து என்பத்தி ஏழாயிரத்து ஐநூற்றி ஐம்பத்தி இரண்டு மட்டும்) ஆகும் செலவினத்திற்கும் GESM Environment Services நிறுவனத்தின் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்வதற்கும், அதற்கான கால நீட்டிப்பு வழங்குவதற்கும் உரிய செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பொது மக்களின் நலன் கருதி GESM Environment Services நிறுவனத்தின் மூலம் மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து துப்புரவு பணி செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.27,87,552/—ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **744, நாள். 31.01.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.